**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை புதிய திருத்தப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சபையில் தேசிய புத்தக இருப்பொன்றை ஏற்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் நிருவகித்தல் ஒரு பிரதான பணியாகும். அதன் பிரகாரம் சட்ட ரீதியான வைப்புக்கள், நன்கொடைகள், கொள்வனவு செய்தல் மற்றும் பரிமாற்ற சேவைகள் போன்றவையாக சபைக்குக் கிடைக்கபெற்ற கூட்டுமொத்தமான ரூபா 112,360,740 ஆன கொள்வனவு பெறுமதி | சபையின் ஆவணமாக்கல் வளங்களை கணக்கீடு செய்வதற்காக ஆரம்பத்திலிருந்து இதுவரை காணப்படுகின்ற பொது கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம் தேசிய வைப்புக்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட வெளியீடுகளின் பெறுமதி | தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சபையின் தேசிய இருப்பொன்றை ஏற்படுத்துதல் பாதுகாத்தல் மற்றும் நிருவகித்தல் ஒரு பிரதான பணியாக இருந்தமையால் |

| | | |
|---|---|---|
| மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் புத்தக இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் நிறுவனத்தின் பிரதான நோக்கத்தின் பிரகாரம் புத்தகங்களை வகைப்படுத்துதல், புத்தகங்களை இனங்காணல் அல்லது பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காத புத்தகங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கை மற்றும் தேசிய மரபுரிமையாக வகைப்படுத் தப்பட்டுள்ள புத்தகங்கள் தொடர்பான கொள்கை என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் 2022 ஒக்டோபர் மாதம் முதல் எதிர்காலத்தில் தேசிய வைப்புக்களுக்காக சேரிக்கப்படுகின்ற இலவச வெளியீடுகளும் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் 2023 இன் இறுதி நிதி அறிக்கைகளில் இருந்து தேசிய வைப்புக்களுக்கு சேருகின்ற சகல வெளியீடுகளையும் பெறுமதியிட்டு வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அதன் கீழ் சட்ட ரீதியான மற்றும் ஏனைய ஆவணமாக்கல் வளங்களை உரிய பிரகாரம் வகைப்படுத்தி பெறுமதிகளை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் அலுவலகக் கட்டிடம் அமைந்துள்ள காணி இலவச மானியமாக சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியை மதிப்பீடுசெய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் நிலம் அமைந்துள்ள காணி சட்ட ரீதியாக சபைக்குச் சொந்தமாக இல்லாமையினால் இறுதி நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது இந்தக் காணி இலவச மானியமாக அமைச்சரவைக் குறிப்பின் மூலம் சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. விலை மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து உரிய மதிப்பீட்டு பெறுமதி கிடைத்த பின்னர் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள காணியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வங்கிக்கு கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 261,028 ஆன நேரடி செலவு வைத்தல்களுக்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் சரியான பிரகாரம் கணக்குகளை வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அலோசனை வழங்கப்பட்டுள்ளது. | காலப் பகுதிகளுக்குரிய நேரடி செலவு வைத்தல்களை இனங்கண்டு வருமனத்தை உரிய பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கி கணக்கில் ரூபா 219,763 ஆன மீதியை உறுதிப்படுத்துவதற்காக வங்கி பாஸ் புத்தகம் அல்லது மீதி | சபையின் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற கணக்கு இலக்கம் 100010159417 என்ற கணக்கில் (பழைய கணக்கு இலக்கம் - 22827) காணப்படுகின்ற மீதி | மீளாய்வாண்டிற்கு உரிய வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் உறுதிப்படுத்துகின்ற மீதி நிதிக் கூற்றுக்களின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலகக் காகிதாதிகள் இருப்பு மற்றும் மூலவடிவில் மீண்டும் அச்சிடல் செயற்திட்ட புத்தக இருப்பின் பெறுமதி நிதிக் கூற்றுக்களுடனும் களஞ்சிய இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளுடனும் ஒப்பீடு செய்யும் போது ரூபா 1,045,012 வேறுபாடு காணப்பட்டது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட நூலக காகிதாதிகளின் இருப்பின் பெறுமதியான ரூபா 552,783.00 பெறுமதி சரியாக இருந்ததுடன் இருப்பு மெய்மையாய்வின் போது ஏற்பட்டிருந்த தவறான கணிப்பீட்டின் காரணமாக மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதி பிழையாக இருந்தது. | இருப்பு மெய்மையாய்வு சபை அறிக்கை சரியாக தயாரித்து அந்த மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (உ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் புத்தக இருப்பின் கிரயம் ரூபா 112,360,740 ஆக இருந்த போதிலும் வாசகர் பதிவேட்டின் பிரகாரம் புத்தகங்களின் இருப்பு கிரயம் ரூபா 45,805,329 ஆனமையால் ரூபா 66,564,411 வேறுபாடு இனங்காணப்பட்டது. தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் நிதிக் கூற்றுக்களின் படி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் புத்தக இருப்பின் கிரயம் மற்றும் வாசகர் பதிவேட்டின் பிரகாரம் புத்தக இருப்பின் கிரயம் என்பவற்றுக்கு இடையே வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | சரியான இருப்புப் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | அன்பளிப்பு உரித்துறுதி மூலம் பண்டாரகமயில் அமைந்துள்ள 12 பேர்ச் காணி மற்றும் காணியில் அமைந்துள்ள இரண்டு மாடிகளையுடைய தளபாடப் பொருட்களுடன் உள்ள வீடு என்பன 2019 யூலை 19 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்தக் காணி அன்பளிப்பு உரித்துறுதி மூலம் சபைக்கு கையளிக்கப்பட்ட போதும் நிபந்தனைகளுடன் கையளிக்கப் பட்டிருந்தமையால் அரசாங்கத்தின் ஆதனமொன்றாக கையேற்பதில் பிரச்சினைகளுடன் காணப்பட்டது. எனினும் அதன் முழுமையான உரித்து சபைக்கு சொந்தமாக வருகின்றமையால் எதிர்காலத்தில் அதற்காக மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் சொத்துக்களின் கணிப்பீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சரியான பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9.1(ஆ) பந்தி | பணிகள் நிறைவுபெற்றவுடன் செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 05 வருடங்கள் முதல் 09 வருடங்களுக்கிடையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 341,622 ஆன 17 கட்டுநிதி மீதிகள் காணப்பட்டது. | அந்த மீதிகளில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ரூபா 2,528.45 தவிர ஏனைய மீதிகள் தற்போது இனங்காணப் பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756, 757 | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் 112,360,740 ஆன புத்தக இருப்புக்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட புத்தக இருப்பு மீளாய்வாண்டின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | தேசிய நூலக புத்தக இருப்புக்கள் 2023 ஆம் ஆண்டிலிருந்து கட்டம் கட்டமாக மெய்மையாய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளகத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது கட்டத்தின் மெய்மையாய்வு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அதன் இரண்டாவது கட்டமாக தேசிய நூலக உப தொகுதிக்குரிய புத்தக இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 1647(ஆ) | சபைக்குச் சொந்தமான கிரயம் ரூபா 32,270,762 ஆன 07 வாகனங்கள் மற்றும் நிதிக் குத்தகை அடிப்படையில் 02 வாகனங்கள் என்பன மீளாய்வாண்டின் போது | 2022 ஆம் ஆண்டில் இருந்து வருடாந்த மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது நிலையான சொத்துக்களுக்குரிய | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாகவும் மெய்வு ஆய்வு நடவடிக்கைகள் வருடாந்தம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 2022.12.31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்களை மெய்மை ஆய்வு செய்யும் போது சபைக்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |
| (ஆ) | 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சட்டம் | | | |
| (i) | 12(2) (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | நூலக மற்றும் ஆவணமாக்கல் வளங்கள் தொடர்பாக தேசிய இருப்பொன்றை வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆவணமாக்கல் பொருட்கள் இருப்பொன்றை ஸ்தாபித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றம் பேணிச் செல்லுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கின்ற பணிகளை நிறைவேற்றும் செயல் முன்னேற்றத்தை பாதுகாத்தல் மற்றும் மீளமைத்தல், கையகப்படுத்துதல் மற்றும் நூல் விஞ்ஞாபன நிர்வாக பிரிவுகளின் செயல் முன்னேற்ற அறிக்கைகளில் பிரதிபலிக்காதிருந்ததுடன் அந்தப் பிரிவுகளில் முறையே 33,353, அலகுகள், 9,210 அலகுகள் மற்றும் 4,743 அலகுகள் தொலைந்துபோய் இருந்தன. | 2018 ஆம் ஆண்டு முதல் ஆய்வகம் இயங்காமையாலும், ஒரேயொரு ஆவணப் பாதுகாப்பு உத்தியோகத்தர் மாத்திரம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையாலும் பாதுகாக்கப்பட வேண்டிய புத்தகங்களின் அளவு இடைநிலையில் காணப்பட்டதற்கான காரணமாக இருந்தது. | சட்டத்தின் பிரகாரம் சபைக்கு கையளிக்கப்பட் டுள்ள பணிப் பொறுப்புக்களை செயற்திறனாக நிறைவேற்றுவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 12(2) (எ) பிரிவு | நூற்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட வேண்டிய காலப் பகுதி குறித்துரைக்கப்படாதிருந்த துடன் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தாமதடைந்த புத்தகங்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தது. | தாமதமாகி இருந்த 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கை தேசிய புத்தக பெயர் பட்டியல் தற்போது அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த தாமதத்திற்காக இந்தக் காலப் பகுதியில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலையின் காரணமாக இருந்தது. | சட்டத்தின் பிரகாரம் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்களை செயற் திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 28 மாத தாமதத்தின் பின்னர் 2023 யூன் 02 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | தற்போது வரையில் காணப்படுகின்ற பிரச்சினைகளாக நிலைமைகளை மாற்றியமைத்து சராசரி நிலைமைக்கு வந்துள்ளதுடன் தற்போது 2021 ஆம் ஆண்டின் இறுதி நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றது. | 2023 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பீஈடீ/12 என்ற சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 342 என்ற திறைசேரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 378,462,735 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடு நாளாதுவரையாக பேணிச்செல்லப் பட்டிருக்கவில்லை. | தற்போது இறுதிக் கணக்குகளில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிலையான சொத்து பதிவேட்டைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய இலக்கம் SC&PMU/Grant/20 வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | வெளிநாட்டு மானியம் மற்றும் பயிலுநர் நிதி உதவி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பெற வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 16 ஆம் திகதி ரூபா 686,040 தொகை கனடாவின் பொதுநலவாய கற்கை அமைப்பினால் Skill online learning செயற்திட்டத்தின் கீழ் சபையின் வங்கிக்கு | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கும், கல்வி அமைச்சிற்கும் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் இவ்வாறான செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது கணக்காய்வினால் சுட்டுக்காட்டப்பட்ட பிரகாரம் கல்வி அமைச்சிற்கு அறிவித்து அதன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்தது. | பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,963,702 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,465,100 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 318,612 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 5.23 ஆகவும், விரைவு விகிதம் 4.23 ஆகவும் இருந்ததுடன் கடந்த ஆண்டில் அந்த விகிதம் முறையே 2.80 மற்றும் 1.80 ஆக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரை அச்சிடப்பட்ட ரூபா 2,084,167 பெறுமதியான 7,193 சபை வெளியீடுகள் 2023 யூலை 18 ஆம் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது விரிவாக்கல் பிரிவினால் புத்தகங்கள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தேசிய நூலக புத்தக நிலையம், கண்காட்சி மற்றும் வருடாந்த பங்களிப்பு போன்ற முறைமைகளின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையினை இனங்கண்டு அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் காணப்படுகின்ற புத்தகங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதி முதல் 09 மாத காலத்தில் பிரதான கட்டிடத்தை நவீனமயப் படுத்துதலை பூர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சினால் ரூபா 211,937,795 ஆன வரியின்றிய ஒப்பந்தமொன்று ஒப்பந்தக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 252,463,612 செலுத்தி 03 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 மார்ச் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டிருந்தது. 2021 சனவரி 05 ஆம் திகதி இலக்கம் 15-02-07 என்ற தலைவரின் கடிதத்தின்படி தரை மாடியில் இருந்து | கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி 25 சதவீதம் அளவிலான செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அரச பொறியில் கூட்டுத் தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட போதும் அந்த நிறுவனமும் நட்டத்தை பெறுகின்ற நிறுவனமாக இருந்தமையால் கட்டிடத்தின் மிகுதி நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான தரப்பினரை தெரிவு செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நான்காம் மாடி வரை முழுமை பெறாமை மற்றும் குறித்துரைத்த பிரகாரம் அந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப் பணிகள் இனங்காணப்பட்ட போதும் 2022 நவம்பர் 09 ஆந் திகதி வரையிலும் அந்தக் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.